
# பொருநை

## ஆற்றங்கரை நாகரிகம்



தொல்லியல் துறை
தமிழ்நாடு அரசு

# பொருநை

## ஆற்றங்கரை நாகரிகம்

தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை



மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

நாள்: 7.9.2021

## அணிந்துரை

தமிழ் நிலமானது மிகத் தொன்மை வாய்ந்தது. தமிழின் தொன்மையையும், தமிழரின் பண்பாட்டையும் அறிவியல் பூர்வமாக நிறுவ வேண்டுமானால் முறையான அகழாய்வுகள் அவசியமாகும். நம் மூதாதையர் விட்டுச் சென்ற அடையாளங்கள் மூலம் வரலாற்றினை மறுகட்டமைப்பு செய்வதற்கு சான்றுகளாக கல்வெட்டுகளும், அகழாய்வுத் தொல்பொருட்களும் திகழ்கின்றன. தமிழ்நாட்டின் ஒவ்வொரு குக்கிராமத்திலும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளங்கள் கோயில்களாகவோ, கல்வெட்டுகளாகவோ, பாறை ஓவியங்களாகவோ, நடுகற்களாகவோ, நீர் மேலாண்மைத் தொழில் நுட்பத்தினைப் பறைசாற்றும் மதகுகளாகவோ காணப்படுகின்றன. இத்தகைய தொல்லியல், வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

இத்தகைய மேன்மைமிகு நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், இந்திய அளவில் ஒரு மாநிலத்திற்கென்று தொல்லியல் துறை தொடங்கப்பட்டது தமிழ்நாட்டில்தான் என்பது நமக்கு அளப்பரிய பெருமையாகும். நமது முன்னோர்களின் அடையாளங்களாக உள்ள தொல்லியல் சின்னங்கள், வரலாற்றுச் சின்னங்கள் போன்றவற்றைப் பாதுகாக்கவும், வரலாற்றினை எழுதுவதற்குத் தொல்லியல் அகழாய்வுகளை மேற்கொள்ளவும், இந்திய அளவில் அதிக எண்ணிக்கையில் உள்ள தமிழ்க் கல்வெட்டுகளைப் படித்து நூலாக வெளியிடவும், 1961-இல் தொல்லியல் துறை உருவாக்கப்பட்டது.

KM

“திரைகடலோடியும் திரவியம் தேடல்’’ என்ற முதுமொழிக்கு ஏற்ப, பண்டையத் தமிழ்ச் சமூகம் நாட்டின் பிறபகுதிகளோடும், வெளிநாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. வணிகம் மூலம் ஏற்பட்ட பல்வேறு பரிமாற்றங்களால் பிற சமூகத்தினரிடமிருந்து வேறுபட்டு மேம்பட்ட சமூகமாகத் தமிழ்ச் சமூகம் மாறியது.

அத்தகைய வணிகப் பரிமாற்றங்கள் மேற்கொள்ள சங்க காலத் துறைமுகங்களான பூம்புகார், கொற்கை, அழகன்குளம், வசவசமுத்திரம் ஆகியவை முக்கியப் பங்காற்றின. இந்தத் துறைமுகங்கள் வாயிலாகப் பண்டைத் தமிழ்ச் சமூகம் மேலைநாடுகளுடனும், கீழைநாடுகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. குறிப்பாக, மேலைநாட்டினரைப் பொதுவாக “யவனர்’’ என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ரோம், எகிப்து, ஓமன், அரேபிய நாடுகளுடன் தமிழ்ச் சமூகத்தினர் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். அதற்குச் சான்றாக தமிழ் எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடுகளும், உடன்படிக்கை மற்றும் வெளிநாட்டவர் குறிப்புகளும் கிடைக்கப்பெறுகின்றன.

சங்ககாலத் துறைமுகங்களாக விளங்கிய வசவசமுத்திரம், பூம்புகார், அழகன்குளம், கொற்கை ஆகிய இடங்களில் நடத்திய நில அகழாய்வுகள் மூலம் பண்டைத் தமிழகம் வெளிநாட்டினருடன் கொண்டிருந்த வணிகச் சிறப்பியல்புகளை உலகறியச் செய்துள்ளது. அதுமட்டுமின்றி, சங்ககால வேந்தர்கள் மற்றும் சிற்றரசர்களின் தலைநகராக இருந்த கரூர், திருக்கோவிலூர் ஆகிய இடங்களிலும், சங்ககால ஊர்களான மாங்குடி, மாங்குளம், கொடுமணல், கோவலன் பொட்டல் ஆகிய இடங்களிலும் தமிழ்நாடு அரசு அகழாய்வு மேற்கொண்டு சங்ககாலத் தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தியது. முத்தாய்ப்பாக, வைகை நதிக்கரையில் அமையப்பெற்றுள்ள கீழடியில் 2017ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு அகழாய்வு செய்து வருகிறது.

கீழடி அகழாய்வு மற்ற அகழாய்வுகளுக்கு முன்னோடி அகழாய்வாகத் திகழ்கிறது. இதுவரை கங்கைச் சமவெளியில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்த “நகரமயமாக்கம்’’ தமிழ்நாட்டில் இல்லையென்றும், பிராமி எழுத்து மௌரியர் தோற்றுவித்தது என்றும் கருதுகோள்கள் இருந்தன. அத்தகைய கருதுகோள்களுக்கு

KM

அறிவியல் பூர்வ விடையளித்துள்ளது. தமிழ்நாட்டில் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலே நகரமயமாக்கம் ஏற்பட்டிருந்தது என்பது மட்டுமல்லாமல், படிப்பறிவும் எழுத்தறிவும் பெற்ற மேம்பட்ட சமூகமாக விளங்கியதை கீழடி அகழாய்வு நிலைநிறுத்தியுள்ளது.

முதலாம் இராசராசன் மற்றும் முதலாம் இராசேந்திரனின் ஆட்சிக் காலங்களில் நிர்வாகம், சமூகப் பொருளாதாரம், கலை மற்றும் பண்பாடு ஆகியவை உன்னத நிலையில் இருந்தன. அதுபோன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களான பல்லவர் காலத் தலைநகரான காஞ்சிபுரத்தில் உள்ள பல்லவமேடு, சோழர்களின் தலைநகரங்களான தஞ்சாவூரிலுள்ள குறும்பன்மேடு, கங்கை கொண்ட சோழபுரம், மாளிகைமேடு மற்றும் பழையாறை, போசளர்களின் தலைநகரான கண்ணனூர் ஆகிய இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரலாற்றின் சுவடுகளை வெளிப்படுத்தியுள்ளது. மேலும் காடவராயர் சிற்றரசனான கோப்பெருஞ்சிங்கனின் தலைநகரான சேந்தமங்கலம், சம்புவராயரின் தலைநகரான படவேடு ஆகிய அகழாய்வுகளும் வரலாற்றுக்கு சிறப்பு சேர்த்துள்ளன.

பண்டைய தமிழ்ச் சமூகத்தின் அடிச்சுவடுகள் எங்கெல்லாம் உள்ளதோ, அதனைத்தேடி பயணம் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு திட்டம் தீட்டியுள்ளது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகள், நாட்டின் மற்ற மாநிலங்களில் உள்ள பழந்தமிழர்களின் வரலாறு பதிக்கப்பட்ட இடங்கள் மட்டுமின்றி, மேலை நாடுகளிலும் கீழை நாடுகளிலும் வணிகத் தொடர்பாக ஏற்பட்ட பிணைப்பால் உருவான பண்பாட்டுக் கூறுகளைத் தேடியும் உலகப் பயணம் மேற்கொள்ளப்படும்.

தமிழரின் தொன்மையை உலகறியச் செய்வோம்!

(மு.க. ஸ்டாலின்)
தமிழக முதலமைச்சர்

KM





# தங்கம் தென்னரசு

மாண்புமிகு தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப்
பண்பாடு, தொல்லியல் துறை அமைச்சர்

தென்னிந்தியாவின் நாகரிகத் தொட்டில் என்று பொருநை ஆற்றங்கரை நாகரிகம் அழைக்கப்படுகிறது. பொதியமலையில் தோன்றி இப்பகுதியினை வளமையாக்கும் பொருநை ஆற்றினை "பொன்திணிந்த புனல் பெருகும் பொருநை" என்று கம்பன் போற்றிப் புகழ்கிறார். "தண்பொருந்தம் என்றும், தண்பொருநம் என்றும் கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. பொருநை ஆற்றங்கரையில் கொற்கை, ஆதிச்சநல்லூர், சிவகளை போன்ற தொல்லியல் சிறப்புமிக்க ஊர்கள் அமைந்துள்ளன. இவற்றில் கொற்கை இடைச் சங்க காலத்தில் பாண்டியர்களின் தலைநகராகவும் துறைமுகமாகவும் விளங்கியது. பாண்டியர்களின் வெற்றிச் சிறப்பைப் பற்றி

*"வடதிசை கங்கையும் இமயமும் கொண்டு*
*தென்திசை யாண்ட தென்னவன் வாழி"*

என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் போற்றிப் புகழ்கிறார்.

பண்டைய கிரேக்க ரோமானிய ஆசிரியர்களான பிளினி, தாலமி ஆகியோரின் குறிப்புகளும் பண்டைய கிரேக்க நூலான செங்கடல் பயணக் குறிப்புகளும் (Periplus of the Erythrean sea) பாண்டிய நாட்டின் வரலாற்றுக்கு பயனுள்ளவையாக அமைந்துள்ளன. இக்குறிப்புகள் சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகளுக்கு முற்றிலும் பொருத்தமுடன் அமைகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டில், முதன்முதலாகக் கொற்கை கிராமத்திற்கு வந்து கொற்கை தொடர்பான பழந்தமிழ் இலக்கியங்களையும், அயல்நாட்டவர் குறிப்புகளையும் ஆராய்ந்து பலவகை நாணயங்களையும், முதுமக்கட்தாழிகளையும் கண்டறிந்து பாண்டியர்களின் பழமையான தலைநகரம் தொன்மைச் சிறப்புமிக்க துறைமுகப்பட்டினமாகச் செயல்பட்டிருந்தது என்று கொற்கையை உலகறியச் செய்த பெருமை கால்டுவெல் அவர்களையேச் சாரும்.

கொற்கை கோநகர் இடைச் சங்கத்தை எடுப்பித்து வளர்த்தது. இடைச்சங்கம் நிறுவிய வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக எழுபத்தொன்பது பாண்டியர்கள் கொற்கையில் ஆட்சிசெய்துள்ளனர். கொற்கையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பாண்டியர்களைக் கொற்கைக் கோமான், கொற்கைக் கோன், கொற்கைப் பொருநன், கொற்கை வேந்தன், கொற்கைத் துறைவன், கொற்கை யாளி என கொற்கையோடு இணைத்தே அழைத்துள்ளனர். மேலும், தாலமி, பிளினி, மெகஸ்தனிஸ் போன்ற வெளிநாட்டவர் கொற்கையை கொல்சிஸ், கொல்காய் என்றும் கொற்கைத் துறைமுகத்தைக் கொற்கை வணிகமையம்(Kolhoi emporium) என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொற்கைக் கடலில் நடைபெற்ற முத்துக்குளித்தல் தொழிலைப் பாண்டியர் அறநெறி தவறாது காத்து வந்துள்ளனர். இதனை

"மறப்போர் பாண்டியர் அறத்திற்காக்கும்
கொற்கைப் பெருந்துறை முத்து"

என்று மதுரைக் கணக்காயனார் அகநானூற்றுப் பாடல் ஒன்றில் புகழ்கிறார். இப்புலவரே நற்றிணைப் பாடலொன்றில் (நற். 23 5–6) கொற்கை முத்துகளை நன்னீர் முத்துகள் என சிறப்பு செய்கிறார்.

கிரேக்கம், எகிப்து, அரேபிய நாட்டைச் சேர்ந்த கப்பல் மாலுமிகளுக்கும் கடல்வழி வணிகர்களுக்கும் மிகப்பெரிய வணிகத் தலமாகக் கொற்கை விளங்கியதை மேலைநாட்டு நிலநூல் வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். மலோனி(Maloni), லோவன்தால்(Lovanthol) போன்ற அயல்நாட்டு அறிஞர்களும் கொற்கைப் பகுதியினை ஆய்வு செய்து பழங்காசுகளைச் சேகரித்தனர். அவற்றுள் தங்கக் காசுகளும் அடங்கும். லோவன்தால் சேகரித்த பழங்காசுகள் திருநெல்வேலி காசுகள், திருநெல்வேலி தங்கக் காசுகள் என இரு நூல்களாக ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டுள்ளன. சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை மற்றும் மு.வரதராசனார் ஆகியோரும் கொற்கை வரலாற்றின் மீதான காதலால் கொற்கையினை ஆய்வு செய்துள்ளனர்.

பொருநை ஆற்றங்கரை நாகரிகம் என்னும் தலைப்பில் வெளிவந்துள்ள இச்சிறிய நூலில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த முனைவர் ஜாகோர் (Dr. Jagor) என்பவர் 1876–ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூர் பறம்பில் சேகரித்த அரிய தொல்பொருட்கள், 1903 முதல் 1904–ஆம் ஆண்டு வரை ஆதிச்சநல்லூர்ப் பறம்பில் அலெக்சாண்டர் ரீ செய்த அகழாய்வு, இந்திய ஒன்றிய அரசின் தொல்லியல் கண்காணிப்பாளர் திரு. சத்திய மூர்த்தி தலைமையில் 2003 – 2005–ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆதிச்சநல்லூர் அகழாய்வுகள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. மேலும், தற்போது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை ஆகிய இடங்களில் மேற்கொண்டு வரும் அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்றுள்ள தொல்பொருட்களும் அவற்றினைப் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

ஆதிச்சநல்லூரில் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்களைத் தொகுத்து ஆராய்ந்து பார்க்கும்போது பொருநை ஆற்றங்கரைகளில் 3200 ஆண்டுகளுக்கு முன்னரே இரும்பினைக் கண்டுபிடித்து வார்ப்பிரும்பு, தேனிரும்பு, எஃகு முதலியவற்றைத் தயாரித்தல், கப்பல் கட்டுதல், கடல்வணிகம் போன்ற தொழில்நுட்பங்களில் சிறந்து விளங்கியதை அறியமுடிகிறது. ஆதிச்சநல்லூர் பண்பாடு முன்னேறிய தமிழ்ச் சமூகத்தின் பண்பாடு என்று அறுதியிட்டுச் சொல்லலாம்.

இந்நூல் பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் தொன்மை, பண்பாடு மற்றும் விழுமியங்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமையப்பெற்றிருப்பது சிறப்பாகும். மேலும், இந்நூல் உலகத் தமிழ்ச் சமூகத்தினரிடையே மிகப் பெரிய வரவேற்பினை பெறும் என்று நம்புகிறேன்.

NN

## பேராசிரியர் கா.ராஜன்

கல்வி மற்றும் ஆய்வு ஆலோசகர்
தமிழ்நாடு தொல்லியல் துறை




தமிழகத்தின் பதினைந்து இலட்சம் ஆண்டுகால நீண்ட நெடிய பண்பாட்டினைத் தொல்லியல், கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள் ஆகிய முதன்மைச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் கள ஆய்வுகள், அகழாய்வுகள் மூலம் அறிவியல் ரீதியாகத் தமிழகத்தின் தொன்மை வரலாற்றை மீள் உருவாக்கம் செய்கின்ற மிகச் சிறப்பான பணியினைத் தமிழகத் தொல்லியல் துறை மேற்கொண்டுவருவது மன நிறைவு அளிக்கிறது.

அண்மைக்காலமாக கீழடி, அழகன்குளம், கொற்கை, சிவகளை, ஆதிச்சநல்லூர், கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் தமிழகத்தின் தொன்மையைப் புதிய காலக்கணிப்பு மூலம் பல நூற்றாண்டுக் காலத்திற்கு முன்னோக்கி எடுத்துச் சென்றுள்ளது என்றால் மிகையாகாது.

குறிப்பாக, பொருநை ஆற்றங்கரையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வுகள் தமிழகத்தின் வரலாற்றைத் தமிழகத்தின் தென் பகுதியில் இருந்து தொடங்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு நம்மை எடுத்து சென்றுள்ளது எனலாம்.

மேலும், இந்தியாவிலும், மேலைநாடுகளிலும் உள்ள உயர்நிலை ஆய்வுக்கூடங்களில் பணியாற்றும் நிலவியல், நிலப்பொதியியல், மானிடவியல், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், மரபணுவியல் ஆகிய துறைகளில் துறைபோகிய வல்லுநர்களின் துணையுடன் தமிழகத்தின் வரலாற்றை மீட்டெடுக்கும் அறப்பணியில் முனைப்புடன் பணியாற்றி வரும் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியவை.

அச்செயல்பாடுகளின் சிறு வெளிப்பாடாக இக்குறு நூல் தங்கள் கைகளில் தவழ்கின்றது. தமிழகத் தொல்லியல் துறையின் செயல்பாடுகள், அத்துறை அகழ்வாய்வுகளின் மூலம் வெளிகொணர்ந்துள்ள அண்மைக்காலச் சான்றுகள் ஆகியவற்றைத் தமிழக மக்கள் உடனடியாக அறிந்து தம் வரலாற்றின் உண்மைத் தன்மையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இச்சிறு குறிப்புரை நூல் வெளிவந்துள்ளது. இச்செயல்பாடுகளுக்கு ஊக்கமும், ஆக்கமும் அளித்து வரும் தமிழக அரசுக்கு நன்றி. இத்துறையின் ஆய்வுப் பணியினை உங்களுடன் இணைந்து பாராட்டுதலில் பெருமகிழ்வு கொள்கிறேன். இப்பணி மேலும் செழித்திட வேண்டுகிறேன்.



# பொருநை

## ஆற்றங்கரை நாகரிகம்

### தமிழ்ப் பண்பாட்டின் தொட்டில்



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவை 110 விதியின் கீழ் அளித்த அறிக்கை



**மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே,**

*"அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க
இருந்த பெரும் தமிழ் அணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே"*

– என்று மனோன்மணியம் சுந்தரனார் முன்மொழிந்தபடி, செம்மொழியாம் தமிழ்மொழியின் தொன்மை மற்றும் தொடர்ச்சி குறித்தும், தமிழர்கள் உலகெங்கும் சென்று வெற்றித் தடம் பதித்த வரலாற்றுக்கு வலு சேர்க்கும் வகையிலும், சில முக்கிய அறிவிப்புகளைச் சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் இன்று வெளியிட விரும்புகிறேன்.

நாட்டிலேயே முதன்முறையாகத் தொல்லியல் ஆழ்கடல் கள ஆய்வை விரிவாக மேற்கொள்ள பெருமுயற்சி எடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் என்பதை இந்த மன்றத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 1990 ஆம் ஆண்டு கடல்சார் ஆய்வுக்குப் பெருந்திட்டம் தீட்டியதும், பின்னர் கடலில் மூழ்கிய பூம்புகார் நகரத்தினைக் கண்டறிய மேற்கொள்ளப்பட்ட ஆழ்கடல் அகழாய்வில் சில கட்டுமானப் பகுதிகள் கண்டறியப்பட்டதும், முத்தமிழறிஞர் கலைஞரின் பெருமுயற்சியால் தான் என்பதை அனைவரும் அறிவார்கள்.அந்த வரிசையில், சிவகங்கை மாவட்டம், கீழடியில் தற்போது நடைபெற்று வரும் அகழ்வாராய்ச்சி உலக அரங்கில் அனைவரது கவனத்தையும் பெற்றுள்ளது. தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அள்ளிக் கொடுக்கும் கீழடியில் நடைபெற்று வந்த அகழ்வாராய்ச்சியை ஒன்றிய அரசு பாதியிலேயே கைவிட்டபோது, முத்தமிழறிஞர் கலைஞர் அதற்கு எதிராகத் தன் கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்தார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கீழடி அகழாய்வுத் தளத்தினை பார்வையிடல் – 2019

நானும் கடந்த 2019 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, கீழடிக்கு நேரடியாகச் சென்று, அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த அகழாய்வுப் பணிகளைப் பார்வையிட்டேன். வியக்கவைக்கும் செங்கல் கட்டுமானங்கள், கருப்பு

மற்றும் சிவப்பு வண்ணம் தாங்கிய பானை ஓடுகள், அரிய கல்மணிகள், தங்க அணிகலன்கள், சிந்துவெளி நாகரிக காலத்தில் காணப்பட்ட அதே திமில் கொண்ட காளையின் எலும்புகள், விளையாட்டுப் பொருட்கள், தொழிற்பகுதி என ஒரு செழுமைமிக்க சமூகமாக சங்காலத் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் மட்டுமல்ல, உலகமே அறிந்து கொண்டது.



கருப்பு–சிவப்பு நிறமட்கலப் பாத்திரம்–கீழடி

அதுமட்டுமல்ல, கரிமப் பகுப்பாய்வு (Carbon Dating) முடிவுகளின்படி, கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே எழுத்தறிவு பெற்ற சமூகமாக சங்காலத் தமிழர்கள் விளங்கினர் என்பதை இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

அந்தவகையில், 'கீழடி' என்ற ஒற்றைச் சொல் உலகத் தமிழர்களை ஒன்றிணைத்தது என்றே சொல்லவேண்டும். அதே உணர்வைத் தாங்கி தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கீழடி, ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, கொடுமணல், மயிலாடும்பாறை, கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் தற்போது அகழாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. அப்போது கிடைத்த பல்வேறு பழமை வாய்ந்த பொருட்கள் குறித்து, அகில இந்திய அளவில் புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைத் தமிழ்நாடு தொல்லியல் துறை கலந்தாலோசித்தது. அதன்படி, கீழ்க்கண்ட முக்கிய முடிவுகளை வெளியிடுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

கீழடியில் சூரியன், நிலவு மற்றும் வடிவியல் குறியீடுகள் கொண்ட முத்திரைகளுடன் கூடிய வெள்ளிக்காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதை ஆய்வு செய்த தலைசிறந்த நாணயவியல்




கி.மு. 4ஆம் நூற்றாண்டிற்கு முந்தைய வெள்ளிக் காசின் முன் பின் பக்கங்கள் – கீழடி

நிபுணரும், கொல்கத்தா பல்கலைக் கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா பாசு மசும்தார், இந்த வெள்ளி முத்திரைக் காசு, கி.மு. நாலாம் நூற்றாண்டுக்கு முன்னரே, அதாவது மௌரியப் பேரரசர் அசோகர் காலத்திற்கும் முற்பட்டது என்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே, கரிமப் பகுப்பாய்வு முடிவுகளின்படி, கீழடியில் கண்டெடுக்கப் பட்ட தமிழி எழுத்துக்களின் காலம், கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதை வலுப்படுத்தும் விதமாக, தற்போது பெறப்பட்ட இரண்டு கரிம மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளும் கீழடி நாகரிகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தது எனத் தெரியவந்துள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கரிமப் பகுப்பாய்வுகளின் காலக் கணக்கீடு முடிவுகளின்படி, கி.மு. எட்டாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே, கொற்கை ஒரு துறைமுகமாகச் செயல்பட்டு வந்தது என்பது ஏற்கெனவே உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது கொற்கையில் நடை பெற்று வரும் அகழாய்வில் கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற கங்கைச் சமவெளியைச் சார்ந்த பானை ஓடுகள் கிடைத்துள்ளன. இவற்றைக் கவனமாக ஆய்வு செய்த இந்தியத் தொல்லியல் துறையின் முன்னாள் தலைமை இயக்குநர் முனைவர் இராகேஷ் திவாரி மற்றும் இந்து பனாரஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர் இரவீந்திரநாத் சிங் ஆகியோர் கொற்கைத் துறைமுகமானது கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னரே வெளிநாடு களுடனும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடனும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.



கங்கைச் சமவெளியைச் சார்ந்த கருப்பு வண்ணப் பூச்சு பெற்ற பானை ஓடு

கங்கைச் சமவெளியைச் சார்ந்த கருப்பு வண்ணப் பூச்சு பெற்ற பானை ஓடுகள் கிடைக்கப்பெற்ற மட்கலன் – கொற்கை




ஒன்பது அடுக்குக்களுடன் கூடிய துளையிடப்பட்ட குழாய்கள் – கொற்கை

**இவற்றுக்கெல்லாம் மகுடம் சூட்டும் வகையில், ஒரு முக்கிய ஆய்வு முடிவை இங்கு வெளியிட விரும்புகிறேன்.**

தமிழ்நாடு தொல்லியல் துறையால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வின் போது ஆதிச்சநல்லூருக்கு அருகே, சிவகளைப் பறம்புப் பகுதியில் வெளிப்பட்ட முதுமக்கள் தாழி ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகள் அமெரிக்க நாட்டின் மியாமி நகரத்தில் அமைந்திருக்கும் உலகப்புகழ்பெற்ற Beta Analytical Laboratory–க்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன. அதன் ஆய்வு முடிவுகள் சமீபத்தில் கிடைத்துள்ளன. AMS Carbon Dating முறையில் ஆய்வு செய்ததில், முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட உமி நீங்கிய நெல்மணிகளின் காலம் கி.மு. ஆயிரத்து நூற்று ஐம்பத்தைந்து எனக் கண்டறியப்பட்டுள்ளது. **எனவே, 'தண் பொருநை' என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் மூவாயிரத்து**





உமி நீங்கிய நெல்மணிகளின் மாதிரி

BETA Beta Analytic TESTING LABORATORY

Beta Analytic, Inc.
4985 SW 74th Court
Miami, FL 33155 USA
Tel: 305-667-5167
Fax: 305-663-0964
info@betalabservices.com

ISO/IEC 17025:2017-Accredited Testing Laboratory

**REPORT OF RADIOCARBON DATING ANALYSES**


| | |
|---|---|
| Ramalingam Sivanantham | Report Date: August 27, 2021 |
| Tamil Nadu Department of Archaeology | Material Received: August 18, 2021 |

| Laboratory Number | Sample Code Number | Conventional Radiocarbon Age (BP) or Percent Modern Carbon (pMC) & Stable Isotopes | |
|---|---|---|---|
| **Beta - 600726** | **SGI2019-1-001** | **2950 +/- 30 BP** | IRMS δ13C: -25.8 o/oo |

**(95.4%)** **1260 - 1051 cal BC** **(3209 - 3000 cal BP)**

Submitter Material: Organics (rice with soil)
Pretreatment: (plant material) acid/alkali/acid
Analyzed Material: Plant material
Analysis Service: AMS-PRIORITY delivery
Percent Modern Carbon: 69.26 +/- 0.26 pMC
Fraction Modern Carbon: 0.6926 +/- 0.0026
D14C: -307.36 +/- 2.59 o/oo
Δ14C: -313.28 +/- 2.59 o/oo (1950:2021)
Measured Radiocarbon Age: (without d13C correction): 2960 +/- 30 BP
Calibration: BetaCal4.20: HPD method: INTCAL20

KM


BetaCal 4.20

**Calibration of Radiocarbon Age to Calendar Years**

(High Probability Density Range Method (HPD): INTCAL20)

(Variables: d13C = -25.8 o/oo)

**Laboratory number** **Beta-600726**

**Conventional radiocarbon age** **2950 ± 30 BP**

95.4% probability

(95.4%) 1260 - 1051 cal BC (3209 - 3000 cal BP)

68.2% probability

(68.2%) 1219 - 1116 cal BC (3168 - 3065 cal BP)

**SGI2019-1-001**



**Database used**
**INTCAL20**

**References**
**References to Probability Method**
Bronk Ramsey, C. (2009). Bayesian analysis of radiocarbon dates. Radiocarbon, 51(1), 337-360.
**References to Database INTCAL20**
Reimer, et al., 2020, Radiocarbon 62(4):725-757.

**Beta Analytic Radiocarbon Dating Laboratory**
4985 S.W. 74th Court, Miami, Florida 33155 • Tel: (305)667-5167 • Fax: (305)663-0964 • Email: beta@radiocarbon.com
Page 4 of 5

இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல்பூர்வ ஆய்வுகளின் அடிப்படையில் உறுதி செய்ய முடிகிறது என்பதைத் தமிழ் கூறும் நல் உலகம் அறியும் வகையில், இந்த ஆய்வுமுடிவுகளை அறிவிப்பதில் அளப்பறிய பெருமிதமும், மனமகிழ்ச்சியும் கொள்கிறேன்.

பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், அரியமணிகள், முத்து குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்துகொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், இந்தியாவில் வேறெந்த மாநிலத்தை விடவும் அதிக அளவு நிதியாக ஐந்து கோடி ரூபாய் இந்த நிதியாண்டில் அகழ்வாராய்ச்சிப் பணிக்காகவும், ஆழ்கடல் அகழாய்வுக்காகவும் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பதை, மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். அதன் தொடர்ச்சியாக, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்த அரிய பொருட்களை அழகுற காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் நவீன வசதிகளுடன் "பொருநை" அருங்காட்சியகம் உருவாக்கப்படும்.

இதுமட்டுமல்ல, தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி, இந்திய நாடெங்கும், அதேபோல் கடல்கடந்து பயணம் செய்து தமிழர்கள் வெற்றித்தடம் பதித்த வெளிநாடுகளிலும் தமிழ்நாடு தொல்லியல் துறை உரிய அனுமதிகள் பெற்று இனி ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

முதற்கட்டமாக, சங்ககால துறைமுகமான முசிறி தற்போது பட்டணம் என்ற பெயரில் கேரள மாநிலத்தில் அமைந்துள்ளது. சேரநாட்டின் தொன்மையினையும், பண்பாட்டினையும் அறிந்து கொள்ளும் வகையில், கேரள மாநிலத் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து ஆய்வுப்பணி மேற்கொள்ளப்படும். அதேபோல், ஆந்திர மாநிலத்திலுள்ள வேங்கி, கர்நாடக மாநிலத்தின் தலைக்காடு மற்றும் ஒடிசா மாநிலத்திலுள்ள பாலூர் ஆகிய வரலாற்றுச் சிறப்புடைய இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ள உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



முசிறி – அமண என்று தமிழி எழுத்துப் பொறித்த பானை ஓடு







குசிர்–அல்–காதிம் : கணன், சாதன், பனை ஓரி என்று தமிழி எழுத்துகளால் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள்



கோர்ரோரி,ஓமன் நாடு – ணந்தை கீரன் தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானை ஓடு

அன்றைய ரோமப் பேரரசின் ஒருபகுதியாக விளங்கிய எகிப்து நாட்டிலுள்ள குசிர்–அல்–காதிம் மற்றும் பெர்னிகா, மேலும் ஓமன் நாட்டின் கோர் ரோரி ஆகிய இடங்களில் பழந்தமிழகத்தோடு இருந்த வணிகத் தொடர்பை உறுதி செய்யும் வகையில், தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. அந்தப் பகுதிகளில், அந்தந்த நாட்டின் தொல்லியல் வல்லுநர்களுடன் இணைந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

இதுமட்டுமல்ல, மாமன்னன் இராசேந்திர சோழன் வெற்றித் தடம் பதித்த தென்கிழக்கு ஆசிய நாடுகளான இந்தோனேஷியா, தாய்லாந்து, மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களில் அந்தந்த நாட்டு தொல்லியல் வல்லுநர்கள் துணையோடு, உரிய அனுமதி பெற்று ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

*‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’*

என உலகிற்கு அறிவித்த தமிழரின் பண்பாட்டு அடையாளங்களைத் தேடி, உலகெங்கும் இனி பயணம் செய்வோம்.

இந்தியத் துணைக்கண்டத்தின் வரலாறு, இனி தமிழ் நிலப்பரப்பில் இருந்துதான் தொடங்கி எழுதப்பட வேண்டும் என்பதைச் சான்றுகளின் அடிப்படையில் அறிவியல் பூர்வமாக நிறுவுவதே நமது அரசின் தலையாயக் கடமை என்பதை இம்மாமன்றத்தின் மூலம் உலகிற்கு அறிவிப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!!



தமிழி எழுத்துப்பொறிப்புக் கொண்ட பானை ஓடுகள் – கீழடி

# இலக்கியங்களில் பொருநை

சேரநாட்டு 'ஆன் பொருநை' ஆறு, சங்க இலக்கியங்களிலே, 'பொருநை' என்றும், 'தண் ஆன் பொருநை' என்றும் பெயர் பெற்றுள்ளது. தென்பாண்டி நாட்டுத் "தண்பொருநை" ஆறு, (தாமிரபரணி ஆறு) 'பொருநை' என்றும், 'தண்பொருநை' என்றும், 'பொருநல்' என்றும், 'பொருந்தம்' என்றும் வழங்கப் பெற்றுள்ளது. தொல்காப்பியப் பொருளதிகாரம் கற்பியற்சூத்திரத்தின் (50) உரையில், நச்சினார்க்கினியர், 'காவிரியும் தண்பொருநையும் ஆன் பொருநையும் வையையும் போலும் யாற்றிலும்' என்று இரண்டு பொருநைகளையும் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுகிறார்.

கிர்நார் கல்வெட்டில் அசோகனும் (கி.மு. 273 – 232) 'தாம்பபண்ணி' என்ற பெயரால் தண்பொருநை ஆற்றினைக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான புறநானூறு 'தண்பொருநை' என்று வஞ்சியோடு தொடர்புபடுத்திக் குறிப்பிடுகின்றது.

*"அரி மயிர்த் திரள் முன்கை*

*வால் இழை, மட மங்கையர்*

*வரி மணற் புனை பாவைக்குக்*

*குலவுச் சினைப் பூக் கொய்து*

***தண் பொருநைப்*** *புனல் பாயும்*

*விண் பொருபுகழ், விறல்வஞ்சிப்*

*பாடல் சான்ற விறல்வேந் தனும்மே*

*வெப் புடைய அரண் கடந்து,*

*துப்புறுவர் புறம்பெற் றிசினே"* (புறநானூறு 11)

(பொருநை – கருவூர்க்குச் சமீபத்திலோடும் ஆன்பொருந்தமென்னும் ஆறு)

சங்க இலக்கியங்களுக்குப் பின்னர்த் தோன்றிய தமிழ் நூல்களில் தாமிரபரணி ஆறு "தண்பொருநை' என்று சீராட்டப் பெற்றுள்ளது.

நம்மாழ்வார் அருளிய திருவாய் மொழியிலே, இந்த ஆறு, 'பொருநல்' என்று வழங்கப் பெற்றுள்ளது; 'பொருந்தம்' என்பதே பொருநை என மருவியுள்ளது என்றும் பொருந்தம் என்பது பொருந்துதல் என்னும் பொருளதாக இருக்கலாம் என்றும் தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடான கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.

"திருவழுதி நாடென்றும் தென்குருகூ ரென்றும்,

மருவினிய **வண்பொருநல்** என்றும், – அருமறைகள்

அந்தாதி செய்தான் அடியிணையே எப்பொழுதும்,

சிந்தியாய் நெஞ்சே தெளிந்து."( திருவாய் மொழி தனியன்)

கம்பராமாயணத்தின் கிட்கிந்தா காண்டத்தின் நாடவிட்ட படலத்தில் 31 – ஆவது பாடலில்,

"தென் தமிழ்நாட்டகன் பொதியில்

திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்

என்றும் அவன் உறைவிடமாம்

ஆதலால் அம்மனையை இடத்திலிட்டு ஏகில்

பொன்திணிந்த புனல் பெருகும் **பொருநையெனும்**

திருநதியின் பின்பொழிய நாகக்

கன்று வளர் தடஞ்சாரல் மகேந்திரமா

நெடுவரையும் கடலும் காண்பீர்"

என்று பொருநை குறிப்பிடப்படுகின்றது.

கலிங்கத்துப் பரணியில்,

"பொன்னித் துறைவனை வாழ்த்தினவே

**பொருநைக்** கணவனை வாழ்த்தினவே"

என்ற பாடலிலும் பொருநை சிறப்பித்துக் கூறப்படுகிறது.

சேக்கிழாரின் பெரிய புராணத்திலே மும்மையால் உலகாண்ட சருக்கத்தில் உள்ள மூர்த்தி நாயனார் புராணத்தின் இரண்டாம் பாடல் 'தண் பொருந்தம்' என்று குறிப்பிட்டுள்ளது.

"சாயுந்தளிர்வல்லி மருங்கு னெடுந் தடங்கண்

வேயும் படுதோளியா பண்படு மின்சொற் செய்ய

வாயும் படுநீள்கரை மண்பொருந் **தண்பொருந்தம்**

பாயுங் கடலும் படுநீர்மை பனித்த முத்தும்".

இப்பாடலின்படி, தண் பொருந்தம் – குளிர்ச்சியுடைய தாமிரபரணி ஆறு என்பது பொருளாகும்.

இராசராசசோழன் உலா, 'பொருநை' என்று புகழ்ந்துள்ளது.

முக்கூடற்பள்ளு என்னும் சிற்றிலக்கியத்திலே 'பொருநையாறு பெருகிவரப் புதுமை பாரும் பள்ளீரே!!" என்று புலப்படுத்தப் பெற்றுள்ளது.

பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் பாண்டித்திருநாட்டுப் படலத்தில், 'பொதிகை' என்னும் மலை மடந்தை, 'பெருகு தண்பொருநை' என்னும் நீத்தம் (வெள்ளம்) மிகு மகளைச் செவிலிபோல் வளர்க்கும்' என்று எடுத்தியம்புகிறது.

*“கருநிறமேகமென்னுங்கச்சணிசிகரக்கொங்கை*

*யருவியாந்தீம்பால்சோரவகன்சுனையென்னுங்கொப்பூழ்*

*பொருவில்வேயென் னுமென்றோட்பொதியமாஞ்சைலப்பாவை*

**பெருகுதண்பொருநை** *யென்னும்பெண்மகப்பெற்றாளன்றே(7)*

மேலும்,

*“பன்மலர்மாலை வேய்ந்துபானுரைப்போர்வை போர்த்துத்*

*தென்மலைத்தேய்ந்தசாந்தமான்மதச்சேறுபூசிப்*

*பொன்மணியாரந்தாங்கிப்* **பொருநை***யாங்கன்னிமுந்நீர்த்*

*தன்மகிழ்கிழவனாகந்தழீஇக்கொடுகலந்ததன்றே. (10)*

குமரகுருபர அடிகள் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், 'பொருநைத் துறைவன் பொற்பாவாய், புதுநீர் ஆடி அருளுகவே' என்று உரைக்கின்றது.

பகழிக் கூத்தர் வழங்கியுள்ள 'திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்' என்னும் நூலில், 'தண்பொருநைப் பேராற்றிலே, தமிழ் நாகரிகம் மணக்கும்' என்ற கருத்து புனைந்துரைக்கப்பெற்றுள்ளது.

இறுதியாக, பாரதியார் இந்த ஆற்றினை 'தமிழ் கண்ட தண்பொருநை' என்று உறுதி செய்துள்ளார்.

## கல்வெட்டுகளில் பொருநை

திருநெல்வேலி மாவட்டம், சீவலப்பேரியில் உள்ள சத்யநாராயணப்பெருமாள் கோயிலில் காணப்படும் முதலாம் இராசராசனுடைய 28– ஆம் ஆட்சி ஆண்டு

(கி.பி.1013) வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றில், "தண்பொருந்தத்தின் வடகரை தென் திருமாலிருஞ்சோலை எம்பெருமானுக்கு" என்று தண்பொருந்தம் குறிக்கப்பட்டுள்ளது. (இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1906 எண் 411)

"...... தண்பொருந்தமான முடிகொண்டசோழப்பேராறுக்கு ......"என்று திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மன்னார்கோயிலிலுள்ள கோபாலகிருஷ்ண சுவாமி கோயில் கல்வெட்டு கூறுகின்றது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள முடிகொண்டசோழப்பேராறு தண்பொருந்தம் என அழைக்கப்பட்டுள்ளது. இது முதலாம் இராசேந்திர சோழனின் (கி.பி. 1011 – 44) இரண்டாம் மகனான இராசேந்திர தேவனான சுந்தர சோழ பாண்டியனின் (கி.பி. 1052 – 64) 13 – ஆவது ஆட்சி ஆண்டு கல்வெட்டாகும். (எபிகிராபிகா இண்டிகா தொகுதி –11 – எண் : 30)

மேலும், திருநெல்வேலி மாவட்டம், திருவைகுண்டம் வட்டத்திலுள்ள மாறமங்கலம் என்ற ஊரிலுள்ள சந்திர சேகரர் கோயிலிலுள்ள கி.பி. 13– ஆம் நூற்றாண்டு திரிபுவனச்சக்கரவர்த்திகள் மாறவர்மன் சுந்தரபாண்டியனது கல்வெட்டில் தண்பொருநை என்று குறிக்கப்பட்டுள்ளது.

## கல்வெட்டு வரிகள்

'............பெற்ற நெற்றி[க்]கு மெற்கும் தென்னெல்லை தண்பொருநை ஆற்றுக்கு வடக்கும் மெலெல்லை............நரஸிம்ஹதேவர் பற்று குடுத்து முகமழகியபாண்டிய............ கும் வடவெல்லை காலு[க்குத் தெ]ற்கும் ........."

சங்க இலக்கிய நூல்களில் 'ஆன் பொருநை' என்றும் 'தண் ஆன் பொருநை' என்றும் குறிப்பிடப்பட்டுள்ள ஆறு வஞ்சியோடு தொடர்புடையது என்பதால், சேரநாட்டிலோடும் ஆன்பொருந்தமென்னும் அமராவதி ஆறு ஆகும்.

சங்க இலக்கிய நூல்களுக்குப் பின்னர் வரலாற்றுக் காலத்தில் எழுதப்பட்ட தமிழ் நூல்களில் இந்த ஆறு பொருநை, பொருநல், தண்பொருநை, தண்பொருந்தம் என்று வழங்கி வந்துள்ளது தெரியவருகிறது.

தற்போதுள்ள தண்பொருநையாறு முதன்முதலில் நம்மாழ்வாரின் திருவாய்மொழியில் 'பொருநல்' என்று வழங்கப்பெற்றுள்ளது. கம்பராமாயணத்தில் தண்பொருநையாறு 'பொருநை' என்றும் கலிங்கத்துப்பரணியிலும் 'பொருநை' என்றும் சேக்கிழாரின் பெரிய புராணத்திலே 'தண் பொருந்தம்' என்றும் இராசராசசோழன் உலாவில் 'பொருநை' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது தெரியவருகிறது.

முக்கூடற்பள்ளு என்னும் சிற்றிலக்கியத்திலே 'பொருநை' என்றும், பிள்ளைத் தமிழ் இலக்கியங்களான குமரகுருபர அடிகள் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் 'பொருநை' என்றும், பகழிக் கூத்தர் வழங்கியுள்ள 'திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்' என்னும் நூல், 'தண்பொருநை' என்றும் பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் 'தண்பொருநை' என்றும் சான்று பகர்கின்றது.

Repeat

முதலாம் இராசராசனுடைய 28– ஆம் ஆட்சி ஆண்டு (கி.பி.1013) வட்டெழுத்துக் கல்வெட்டில் தண்பொருந்தம் எனக் குறிக்கப்படுகின்றது. கி.பி.13– ஆம் நூற்றாண்டு திரிபுவனச்சக்கரவர்த்திகள் மாறவர்மன் சுந்தரபாண்டியனது கல்வெட்டில் தண்பொருநை என்று குறிக்கப்பட்டுள்ளது.

இராசேந்திர தேவனான சுந்தர சோழ பாண்டியனின் (கி.பி. 1052 – 64) 13–ஆவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு தண்பொருந்தம் என குறிக்கின்றது.

இவ்வாறு, சிற்றிலக்கியங்களும், பேரிலக்கியங்களும் கல்வெட்டுகளும் 'தண்பொருநை' ஆற்றினையும் நாட்டினையும் தமிழ்ப் பண்பாட்டின் தொட்டிலாக– தமிழ் நாகரிகத்தின் பிறப்பிடமாக வரைந்து பறைசாற்றுகின்றன.

# பொருநை
# ஆற்றங்கரை நாகரிகம்

இந்தியாவில் நடைபெற்ற அகழாய்வுகளில் ஆதிச்சநல்லூர்ப் பறம்பில் நடைபெற்ற அகழாய்வே, முதல் அகழாய்வாகும். இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் தாம் மிகத் தொன்மை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

ஆதிச்சநல்லூர், திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூர் செல்லும் சாலையில், பாளையங்கோட்டையிலிருந்து 12 கிலோ மீட்டர் தொலைவில் தண்பொருநை ஆற்றின் தென்கரையில் உள்ளது. ஆதிச்சநல்லூரில் பறம்பு என்று கூறப்படும் மண்மேடு தண்பொருநை ஆற்றின் தென் கரையில் தெற்கு வடக்காக நீண்டு கிடக்கின்றது. இந்தப் பறம்பின் மொத்தப்பரப்பளவு வரம்பு 114 ஏக்கர் ஆகும். இதன் வடபகுதி உயர்ந்தும், தென்பகுதி தாழ்ந்தும் உள்ளது. இது பயிர்த் தொழிலுக்குப் பயன்படாத பாங்கற்ற நிலமாகக் கருதப்படுவதால் பறம்பு என்றழைக்கின்றனர். இந்த இடத்தைப் பண்டையத் தமிழர்கள் இறந்துபோன மக்களின் உடலைப் புதைக்கும் ஈமக்காடாகப் பயன்படுத்தியுள்ளனர்.

## முதல் அகழாய்வு

ஜெர்மன் நாட்டில் உள்ள பெர்லின் நகரைச் சார்ந்த முனைவர் ஜாகோர் (Dr. Jagor) என்பவர் 1876 ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூர் பறம்பில் உள்ள புதர்களைக் களைந்து நிலத்தை அகழ்ந்து அங்குப் புதையுண்டு கிடந்த பழம் பொருள்களை எடுக்கத் திட்டமிட்டார்.

பெர்லின் நகரிலிருந்து கப்பலில் பயணித்து இந்தியா வந்தடைந்தார். பின்னர், தொடர் வண்டி மற்றும் மாட்டு வண்டியிலும் நீண்டநாள் பயணம் செய்து, இந்தியாவின் தென்கோடியில் உள்ள ஆதிச்சநல்லூரை அடைந்தார். இங்கு கிடைக்கப்பெற்ற காண்பதற்கு அரிய தொல்பொருட்களை எடுத்துச் சென்று பெர்லின் அருங்காட்சியகத்தில் இடம் பெறச் செய்துள்ளார்.






பாரீஸ் நகரைச் சார்ந்த எம். லூயிஸ் லேபிக் என்பவர் 1903–04 ஆம் ஆண்டு கள ஆய்வு மேற்கொண்டு கூடுதல் தகவல்களைத் திரட்டினார்.




## இரண்டாவது அகழாய்வு

1903 முதல் 1904–ஆம் ஆண்டு வரை ஆதிச்சநல்லூர்ப் பறம்பில் அலெக்சாண்டர் ரீ அகழாய்வு நடத்தினார். அப்பகுதிகளை கவனமுடன் அகழ்ந்து ஏராளமான தொல்பொருட்களை கண்டெடுத்தார். ஜாகோர் முன்னர் அகழ்ந்து எடுத்த தொல்பொருட்களைப் போன்று பல அரிய தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இத்தகைய கருவூலங்களைப் பெற்றுள்ள ஈமக்காடு (Burial grounds) பழைமை வாய்ந்தவை என்று முடிவு செய்யப்பட்டது.

அலெக்சாண்டர் ரீ அகழ்ந்து எடுத்த தொல்பொருட்கள் அனைத்தும் தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பொது மக்கள் பார்வைக்கு சிறப்பாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



ஆதிச்சநல்லூரில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வகைகளில் களிமண்ணால் ஆன மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. மேலும் அங்கு இரும்பு ஆயுதங்களான கத்திகள், குட்டையான வெட்டு வாய்ப் பகுதியையுடைய வாள்கள் (Short sword–blades), கைக்கோடாரிகள் ஆகியவையும் அதிக அளவில் எலும்புகளும், மனித மண்டையோடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெரிய மட்பாண்டத்தினுள் இருந்த இரு சிறிய மட்கலயங்களில் ஒன்றில் நெல் உமிகள் வைக்கப்பட்டிருந்தன.





அவர் தம் பணியினின்று ஒய்வு பெறுவதற்கு முன்னர் 1913 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் ஆதிச்சநல்லூரில் சேகரித்த தொல்பொருட்களுக்கு ஒரு பட்டியல் உருவாக்கினார். சென்னை அரசு அருங்காட்சியகத்தின் கண்காணிப்பாளராக இருந்த சே.ஆர். எண்டர்சன் முன்னுரையுடனும் 'ஆதிச்சநல்லூர் மற்றும் பெரும்பேர் ஊர்களிலுள்ள வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொல்பொருட்களின் பட்டியல்' (Catalogue of the prehistoric antiquities from Adichanallur and Perumbair) என்னும் தலைப்பில் 1915 ஆம் ஆண்டு சென்னை அரசு அருங்காட்சியகத் துறையின் வாயிலாக நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

ஆதிச்சநல்லூர் பறம்பின் மேற்பரப்பில் மூன்று அடி ஆழம் வரை சரளைக் கற்கள் உள்ளன. அதன் அடிப்பகுதியில் தனிக்கூறாகச் சிதைந்த படிகக்கல் பாறை இருக்கிறது. ஈமத்தாழிகளை புதைப்பதற்கென்று பாறைகளில் தனித்தனியாக உட்குடைவு செய்யப்பட்டுள்ளது.




இந்த ஈமக்காட்டில் பெரிய தாழிகள் பல அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தாழிகள் ஏறத்தாழ 6 அடி ஆழத்தில் புதைக்கப்பட்டிருந்தன. சில தாழிகள் மேல் மட்டத்திலிருந்து 3 அடி முதல் 12 அடிவரை ஆழத்தில் இருந்துள்ளன. சில இடங்களில் ஒன்றின்மீது ஒன்றாகவும் புதைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக் காலத்திற்கு முந்திய ஈமக்காடு பகுதிகளில் இதுதான் மிகப் பரந்ததாகும்.




# ஈமத்தாழிகளும் தொல்பொருள்களும்




ஈமத்தாழிகளும் அவற்றினுள்ளே எலும்புகளும், மட்பாண்டங்களும் பொன், உயர்தர வெண்கலம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களாலான கிண்ணங்களும் வைத்துப் புதைக்கப்பட்டுள்ளன.











# தங்கத்தினால் ஆன பட்டங்கள்

இப்பட்டங்கள் மெல்லிய பொன் தகட்டினால் நீள்வட்ட வடிவில் (முட்டை வடிவில்) செய்யப்பட்டுள்ளன. தகட்டின் மீது முக்கோண வடிவில் கடுகு போன்ற புள்ளிகள் அழகுற பொறிக்கப்பட்டுள்ளன. இப்பட்டங்களின் இறுதியில் இருபுறமும் கயிறு அல்லது கம்பி கட்டுவதற்குச் சிறிய துளைகள் இடப்பட்டுள்ளன. இப்பட்டங்கள் மடித்துச் சுருட்டி வைக்கும் வகையில் உள்ளன.

KM

# பெண் உருவங்கள்



சிந்துவெளி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பெண் உருவம்



ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கண்டடெடுக்கப்பட்ட பெண் உருவம்






# வெண்கலப் பாத்திரங்கள்




# இரும்பு ஆயுதங்கள்

1. எறிவேல் (Spear)
2. ஈட்டி (Lance)
3. குத்துவாள் (Dagger)
4. அம்புமுனை போன்ற ஈட்டி (Barbed javeline)
5. இரு புறமும் கூர்மையான வாள் (Double edged Sword)
6. மூவிலை வேல் (Trident)
7. கூரிய அம்புமுனை (Barbed arrow head)
8. கைக்கோடரி (Hatchets)
9. வாள் (Sword)
10. வளைந்த கத்தி (Curved knife)
11. இருவளைவான கொக்கித் தடி (Hooks with two curved rods)
12. பலி வாள் (Sacrificed sword)
13. அம்புமுனை (Arrow head)
14. வேல் (Javeline)
15. கோடரிகள் (Axes)







16. மும்முனை வேல் (Trident)
17. கேடயம் (Shield)
18. அரிய ஆயுதம் (A Curious Weapon)
19. சிறிய உடைவாள் (Small Dagger)
20. சிறிய ஈட்டி (Small Lance)
21. செங்கோணவாயுள்ள ஈட்டி (Lance with blade rectangular in section)
22. கூம்புவாய் ஈட்டி (Lance with narrow blade)
23. கூரிய வாயுள்ள ஈட்டி (Lance with lapering blade and hollow butt)
24. ஈட்டிப் பிடியுள்ள உள்ளீடற்ற குழாய் (Hallow tube handle of lance)
25. குழிவான விளிம்புள்ள குத்துவாள் (Dagger with tapering point)
26. அகன்ற வாய்ப் பரசு (Hatch broadest at cutting edge)
27. நீண்ட வட்டக் குழிவான ஈட்டி (lance with long round hollow shaft)
28. குழிவான இரும்புக் கைப்பிடி ஈட்டி (Hollow iron handles with rods through the centre)
29. வளைவுகளுள்ள வாள் (Swords with various curved blades tapering with points)



30. சிறிய நுனியுள்ள வாயுடைய ஈட்டி (Lance with lapering blades and hollow handles)

31. கத்தி (Knife)

32. வளைந்த பலவகைக் கத்திகள் (Reaping hook or curved knives of various form)



# கருப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள்








557


# கருப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள்







# நான்கு கால் உள்ள சாடி





# விலங்கின உருவங்கள்

தாழிகளில் வைத்துப் புதைக்கப்பட்ட பொருள்கள் இறந்துபோன மக்கள் பயன்படுத்திய பொருள்களும் அவர்களுக்கு விருப்பமானவையும் அவர்களுடன் வைத்துப் புதைக்கப்பட்டிருக்கலாம். தாழிகளில்உள்ள பொருள்களில், உயர்தர வெண்கலக் கிண்ணங்களும் பூக்கிண்ணங்களும் வீட்டு விலங்குகளான, எருமை, ஆடு, மாடு போன்றவற்றின் வெண்கல உருவங்களும் காட்டு விலங்குகளான புலி, யானை, மான் போன்ற உருவங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும் மக்கள் அணியும் வளை, மோதிரம், காப்பு, கடகம், கடுக்கண் போன்றவையும் சேகரிக்கப்பட்டுள்ளன.



KM



மட்பாண்டங்களின் மீது இரும்புக் கருவியால் அழுத்தி வடிக்கப்பட்ட புள்ளி வடிவங்கள் அழகு செய்கின்றன. அடிப்பாகத்தில் நடுவே வட்டங்களும், அரை வட்டங்களும் தீட்டப்பெற்றுள்ளன.

மேலும் பல மனித எலும்புகளும் மண்டையோடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இத்தாழியில் பெரிய அளவில் எலும்புகளும் சிறிய எலும்புகள் சிதைந்தும் இருந்துள்ளன.

சில மங்கிய செந்நிறம் வாய்ந்த மணிப்பாசிகளும் வெண்கலப்பாசிகளும் கழுத்து மாலைகளுமாகக் கண்டெடுக்கப்பட்டன. புதைகுழிகளுக்கு வெளியே அரவைக்கல்லும் காணப்பட்டன. பெரும்பாலும் மட்பாண்டங்கள் அனைத்தும் தரமான களிமண்ணால் வனையப்பட்டு, சூளையில் வைத்து வேகவைக்கப்பட்டுள்ளன. அவை செவ்வண்ணம், கருப்பு வண்ணம் மற்றும் கருப்பு–சிவப்பு, கறுப்பு வண்ணங்களில் கவினுறக் காணப்படுகின்றன.


ஆதிச்சநல்லூர்ப் பறம்பு தொல்பொருள் ஆய்வுத்துறைக்கு ஒரு வற்றாத கருவூல ஊற்றாக நிலவுகிறது. விலை மதிப்பற்ற தொல்பொருட்களைத் தன்னகத்தே அடக்கி வைத்துக் கொண்டிருக்கும் களஞ்சியமாகத் திகழ்கிறது.



# ஆதிச்சநல்லூர் அகழாய்வு (2003-05)

நூறாண்டுகளுக்குப் பின்னர் இந்திய ஒன்றிய அரசின் தொல்லியல் கண்காணிப்பாளர் திரு. சத்திய மூர்த்தி தலைமையில் 2003 – 2005–ஆம் ஆண்டுகளில் ஆதிச்சநல்லூரில் மீண்டும் அகழாய்வுப்பணி நடைபெற்றது. இந்த அகழாய்வு பறம்பு என அழைக்கப்படும் இடுகாட்டுப் பகுதியில் மட்டுமே நடத்தப்பட்டன. இங்கு 600 ச.மீ பரப்பளவில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில்







ஆதிச்சநல்லூர் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற அலங்கரிக்கப்பட்ட பானை ஓடு


















160 க்கும் மேற்பட்ட முதுமக்கள் தாழிகள் கண்டெடுக்கப்பட்டன. மேலும், சுடுமண்ணாலான பொருட்கள், இரும்புக்கருவிகள், மனித எலும்புக்கூடுகள் மற்றும் மண்டை ஓடுகள் தாழிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்டன.

# ஆதிச்சநல்லூர் அகழாய்வு (2019-21)

இதுவரை மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் பறம்பு பகுதியில் (burial ground) மட்டும் நடைபெற்றுள்ளதால், முதுமக்கள் தாழிகள் பற்றியும், இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை, சடங்குகள், பழக்க வழக்கங்கள் பற்றி மட்டுமே அறிய முடிந்தது. ஆனால் அம்மக்களின் வாழ்விடப்பகுதி, வாழ்வியல் நடைமுறைகள் பற்றி கேள்விக்குறியாக இருந்தது. அதற்கு விடைகாணும் வகையில் தற்போது தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வாழ்விடப்பகுதிகளிலும் அகழாய்வுகள் மேற்கொண்டுவருகிறது.

ஆதிச்சநல்லூர் அகழாய்வில் இதுவரை 847 தொல்பொருட்களும் பல்வேறு வகையான பழங்கால மட்பாண்டங்கள் அதிக அளவிலும் கிடைத்துள்ளன. இத்தொல்பொருட்கள் ஆதிச்சநல்லூரின் வரலாற்றை மறுகட்டமைக்க உதவுகிறது. ஒவ்வொரு தொல்பொருளும் தண்பொருநை ஆற்றங்கரையில் வாழ்ந்த பண்டைய மக்களின் பண்பாட்டினை வெளிப்படுத்துகிறது.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தற்போது மேற்கொண்டுவரும் அகழ்வாராய்ச்சியின் முக்கிய நோக்கம் இப்பகுதியின் தொடக்ககாலக் குடியேற்றத்தை அறிந்து கொள்வதும், ஈமக்காட்டுப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள அக்கால மக்களின் வாழ்விடங்களை அடையாளங்காணுவதே ஆகும். தற்போதைய அகழ்வாராய்ச்சியானது நீண்ட காலக் கேள்விக்கு விடையளிக்கும் வகையில் ஆதிச்சநல்லூரின் பழங்கால வாழ்விடங்களைத் தொல்லியல் சான்றுகளின் மூலம் அடையாளப்படுத்தியுள்ளது.




நுண்கற்காலக் கருவிகள்

இந்தக் கற்கருவிகள் மண்ணடுக்குகளிலிருந்து வெளிக்கொணரப்பட்ட முதுமக்கள் தாழிக்கு அடியில் காணப்பப்படுகின்றன. செர்ட் வகை கற்களால் செய்யப்பட்ட கத்தி, முனை மற்றும் சுரண்டி போன்ற கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இரும்புக் காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்க காலம் என இரண்டு காலகட்ட வாழ்விடங்கள் கண்டுபிடிக்கப்படட்டுள்ளன. அகழாய்வானது இரும்புக் காலத்திற்கு முன்னும் பின்னும் வாழ்ந்த மக்களின் வரலாற்றை வெளிப்படுத்தியுள்ளது. கற்காலத்தைச் சார்ந்த நுண்கற்காலக் கற்கருவிகள் கிடைத்திருப்பதன் மூலம் இரும்புக் காலத்திற்கு முற்பட்ட மக்கள் இங்கு வாழ்ந்திருப்பதை அறிய முடிகிறது. இது இப்பகுதியில் தொடக்ககாலக் குடியேற்றத்தைக் குறிக்கிறது. இரும்புக்கால வரலாற்றை அறிவதற்கு முத்தாய்ப்பாக இருப்பது முதுமக்கள் தாழிகளும் அதனோடு கூடிய ஈமப்பொருட்களாகும். இது தற்போதைய அகழாய்வு மற்றும் முந்தைய அகழாய்வுகளின் மூலமாகப் போதிய அளவு தரவுகளைப் பெற்றிருக்கிறது.



முதுமக்கள் தாழி



மூடியுடன் கூடிய முதுமக்கள் தாழி





குறியீடுகள் பொறிக்கப்பட்டப் பானை ஓடுகள்

ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி வரலாற்றில் தமிழி எழுத்துக்களைக் கொண்ட பானை ஓடுகள் தற்போதைய அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. மேலும், குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள் 500 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் கிடைக்கின்றன.

இதன் வாயிலாகத் தொடக்க வரலாற்றுக் கால மக்கள் இங்கு வாழ்ந்திருப்பதை உறுதி செய்ய முடிகிறது. இம்மக்கள் இரும்புக் காலத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் வாழ்ந்து வந்திருப்பதை அவர்கள் பயன்படுத்திய பல்வேறு மட்பாண்டங்கள், தொல்பொருட்கள், துளையிடப்பட்ட கூரை ஓடுகள் போன்ற சான்றுகள் வாயிலாக அறிகிறோம்.



இரும்பினாலான தொல்பொருட்கள்



மேற்கூரை ஓடுகள்

ஈமத்தாழிகளில் கிடைத்துள்ள தரமான தொழில்நுட்பத்துடன் செய்யப்பட்ட மட்பாண்ட வகைகள் வாழ்விடப்பகுதிகளில் கிடைக்கப்பெற்றுள்ளன. குறிப்பாகக் காலத்தால் முற்பட்ட வெள்ளை வண்ணப் புள்ளிகள் இட்ட கருப்பு–சிவப்பு வண்ண மட்பாண்டங்கள், கிண்ணங்கள் வாழ்விடப்பகுதிகளில் கிடைக்கப்பெற்றுள்ளன. இவை மேம்பட்ட மக்கள் பயன்படுத்தியதற்கு சான்றாகத் திகழ்கின்றன.



சிவப்பு மற்றும் கருப்பு–சிவப்பு நிறப் பானைகள், கிண்ணங்கள்

தொல்பொருட்களில் வட்டச்சில்லுகள் அதிக எண்ணிக்கையில் காணப் படுகின்றன. மேலும், செம்பு மற்றும் இரும்பிலான மோதிரங்கள், கண்ணாடி மணிகள், தந்தத்தினாலான மணிகள், அரிய கல் மணிகள், கண்ணாடி வளையல் துண்டுகள், எலும்பு மணிகள், சுடுமண்ணாலான மணிகள் மற்றும் வளையல்கள் ஆகியவை தண்பொருநை ஆற்றங்கரையில் வாழ்ந்த மேம்பட்ட தமிழ்ச் சமூகத்தின் அணிகலன்களை கண்முன்னே சான்றாக நிறுத்துகின்றன.



தந்தத்தினாலான மணி



ஆட்டக்காய்கள்




செம்பு வளையங்கள்



வட்டச்சில்லுகள்

வீடுகளின் களிமண்மண் தரையைத் தேய்க்க உதவும் கற்கள், அரவைக் கற்கள் மற்றும் கருவிகளைத் தீட்டும் கற்கள் என வீடுகளில் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்பாட்டுப் பொருட்களும் அகழாய்வில் கிடைத்துள்ளன. பண்டைய மக்களின் கைவினைத்திறனைக் காட்டும் மனித மற்றும் பறவைகளின் சுடுமண்ணால் ஆன உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அன்றைய நீர் மேலாண்மைக்குக் கட்டியம் கூறுவது போன்று 21 எண்ணிக்கை கொண்ட சுடுமண்ணாலான குழாய்கள் கிடைமட்டத்தில் பொருத்தப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இது கழிவு நீரை வெளியேற்றுவதற்கு வீடுகளில் அமைக்கப்பட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வாழ்விடப்பகுதிகளில் மேற்கொண்டு வரும் அகழாய்வுகளின் வாயிலாகக் கிடைக்கப் பெற்ற தொல்பொருட்கள், மட்பாண்டங்கள் மூலம் தண் பொருநை ஆற்றங்கரையில் பண்டைய தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல், சமூகப் பொருளாதாரம், கலை, பண்பாடு, சூழலியல், படிப்பறிவு மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றை உலகிற்கு வெளிச்சமிட்டுள்ளது.

# சிவகளை அகழாய்வு

சிவகளை தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டம் தூத்துக்குடியிலிருந்து 31 கி.மீ தொலைவிலும் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து 10 கி.மீ தொலைவிலும் தாமிரபரணி ஆற்றின் வடக்குக் கரையில் அமைந்துள்ளது.

கீழடி போன்றே தொன்மை மிக்க தமிழ்ப் பண்பாட்டு அடையாளமாகக் கருதவேண்டியது சிவகளை தொல் மாந்தர் வாழ்விடம். சிவகளை முதற்கட்ட அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற 'ஆதன்' என்ற தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானையோடு, நமக்கு கீழடியை நினைவூட்டுகிறது. ஆதிச்ச நல்லூரைப்போல செம்பினால் ஆன பொருட்களோ அல்லது தங்கத்தினால் ஆன பொருட்களோ சிவகளையில் இதுவரை கிடைக்கப் பெறவில்லை எனினும், கருப்பு–சிவப்பு வண்ணக் கலயங்கள், குடுவைகள், பானை மூடிகள் போன்றவற்றில் அழகிய வடிவமைப்பில் வரையப்பெற்றுள்ள வெள்ளை வண்ண வேலைப்பாடுகளை நோக்கும் போது இரும்புக் காலத்தில் சிவகளைப் பகுதியில் வாழ்ந்த தமிழ்ச் சமூகம் மிகப் பழமையானதாகக் கருதப்படுகிறது. மேலும், இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட நெல்லினை கரிமப் பகுப்பாய்வு செய்ததில் இதனின் காலம் கி.மு. 1155 என கால வரையறை செய்யப்பட்டுள்ளது.

KM







அகழாய்வில் முதுமக்கள் தாழி




வெள்ளை வண்ணம் பூசப்பட்டுள்ள விளிம்புடன் கூடிய கிண்ணம்





A2 Urn No:3 Section





A2 Plan




B3 Plan









# நுண் கற்கருவிகள்



# கொற்கை அகழாய்வு

இடைச்சங்க காலத்தின் பழந்தமிழ்ப் பாண்டிய நாட்டின் தலைநகராகவும் துறைமுகப் பட்டினமுமாக விளங்கிய கொற்கையில் தமிழக அரசு தொல்லியல் துறை 1968–69 ஆம் ஆண்டு மேற்கொண்ட அகழாய்வு தமிழக வரலாற்றில் சிறப்பு பெற்றது. ஏனெனில், இந்த அகழாய்வில் சேகரிக்கப்பட்ட கரிமம் ஒன்றினைக் கரிமப் பகுப்பாய்விற்கு உட்படுத்தியதில் இதனின் காலம் கி.மு. 785 என்று காலக்கணிப்பு செய்யப்பட்டது. தூத்துக்குடி மாவட்டம் ஏரல் வட்டத்தில் அமையப்பெற்றுள்ள கொற்கையில் மீண்டும் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை இந்த ஆண்டு அகழாய்வு செய்து வருகிறது. இங்கு பல்வேறு வகையான தொல்பொருட்கள் கிடைத்த வண்ணம் உள்ளன.

சங்கு வளையல்கள் தயாரிக்கும் தொழில் நடைபெற்றதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றில் முழுமையான சங்குகள், பாதி அறுத்த நிலையில் உள்ள சங்குகள், முழுவதும் உடைந்ததுமான சங்கு வளையல்கள் போன்றவை சான்று பகர்கின்றன.





அண்மையில் சதுர வடிவிலான செங்கல் கட்டுமானம் ஒன்றும் கிடைத்துள்ளது. இச்செங்கற்கள் சங்க காலத்தவை என்று அடையாளங் காட்டுகின்றன. இச்செங்கல் கட்டுமானம் 29 அடுக்குகளைக் கொண்டு 2.35மீ உயரம் கொண்டுள்ளது. இக்கட்டுமானத்தின் நடுவே பெரிய கொள்கலன் ஒன்று தலைகாட்டியுள்ளது. இந்தக் கொள்கலன் தனித்துவமாக இச்செங்கல் கட்டுமானத்தில் வைக்கப்பட்டுள்ளதால் இக்கட்டுமானம் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இதனின் தரைத்தளத்தில் சுக்கான் பாறைக்கற்களைக் கொண்டு அடுக்கி அதனின் மீது மணல் பரப்பி அதன்மேல் செங்கல் கட்டுமானம் செம்மையாக எழுப்பப்பட்டுள்ளது. இக்கட்டுமானம் தனித்துவம் வாய்ந்தவையாக உள்ளது.



இந்தக் கட்டுமானத்திற்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் இதனருகே துளைகளுடன் கூடிய 9 அடுக்கு களைக் கொண்ட வடிகட்டும் குழாய் ஒன்றும் வெளிப்பட்டுள்ளது. இதனருகே மேற்கத்திய நாட்டு பானையோடுகளும் கிடைத்துள்ளன. கொற்கையில் தற்போது கிடைத்துவரும் தொல்லியல் சான்றுகள் நீண்ட நெடுங்காலமாகத் தமிழகம் பிற நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டு இருந்தது என்பதையே பறைசாற்றுகிறது.

அண்மையில் கொற்கை அகழாய்வில் கி.மு. 5 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கங்கைச் சமவெளியைச் சார்ந்த கருப்பு வண்ணப் பூச்சு பெற்ற (Black Slipped ware of Gangetic valley) பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.



கொற்கை அகழாய்வுகளில் கிடைக்கப்பெற்றுள்ள வெள்ளி முத்திரைக் காசுகள், வடக்கத்திய மெருகூட்டப்பட்ட கருப்பு நிறப் பானை ஓடுகள் (Northern Black Polished ware), கங்கைச் சமவெளியைச் சார்ந்த கருப்பு வண்ணப் பூச்சு பெற்றுள்ள பானை ஓடுகள் கிடைக்கபெற்றுள்ளதன் மூலம் தென்னிந்தியாவானது கி.மு. 6 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்று இந்தியத் தொல்லியல் துறையின் மேனாள் தலைமை இயக்குநர் முனைவர் ராகேஷ் திவாரி மற்றும் இந்து பனராஸ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் ரவிந்திர நாத் சிங் ஆகியோர் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும், இப்பகுதியைச் சுற்றி அதிகளவிலான தொல்லியல் இடங்கள் காணப்படுவது கொற்கைத் துறைமுகம் கி.மு 8 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே நிறுவப்பட்டுள்ளது என்று கருதலாம். மேலை நாட்டினருடனும், கீழைநாட்டினருடனும் இந்தியாவின் பிற பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கி.மு. 8 ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே நடைபெற்றிருந்ததைக் கொற்கை அகழாய்வின் காலக் கணக்கீடு உறுதி செய்துள்ளது.

**சிவகளைப் பறம்பில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் ஈமத்தாழி ஒன்றில் சேகரிக்கப்பட்ட நெல்லினைக் காலக் கணக்கீடு செய்ததில் இதனின் காலம் கி.மு. 1155 என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பொருநை ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தினரின் மேம்பட்ட பண்பாடு 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று உறுதி செய்ய முடிகிறது.**

ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளையில் கிடைக்கப்பெற்றுள்ள உயரிய வெண்கலம் மற்றும் தங்கத்திலான பொருட்களும், உயரிய சடங்கு முறைகளும் அவர்களின் வளமான பொருளாதாரத்திற்கும் சமூக வாழ்க்கை நிலைக்கும் சாட்சியம் கூறுகின்றன.

ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய தொன்மை வாய்ந்த ஊர்களைப் பெற்றுள்ள பொருநை ஆற்றங்கரை நாகரிகம் 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை சிவகளை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற உமி நீங்கிய நெல்லின் வழிப் பெறப்பட்ட காலக் கணக்கீடு நிலை நிறுத்தியுள்ளது.





# ஆவணப்படுத்துதல்





















# பல துறைகள் மற்றும் வல்லுநர்களுடன் இணைந்து பணிமேற்கொள்ளுதல்

தனிச் சிறப்பான பிரிவுகளின் மதிப்பு வாய்ந்த பங்களிப்பினை ஆழமாகப் பகுத்தாய்ந்து தொல்லியல் கண்டுபிடிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் தமிழ்நாடு தொல்லியல் துறையானது தொல்–தாவரவியல், மூலக்கூறு உயிரியல், மக்கள் மரபியல், சுற்றுச்சூழல் தொல்லியல் மற்றும் மொழியியல் தொல்லியல் போன்ற துறைகளின் வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது.


இப்பெரு முயற்சியில், மும்பையிலுள்ள இந்திய புவிகாந்தவியல் நிறுவனம், பெங்களூருவிலுள்ள இந்திய அறிவியல் நிறுவனம்,பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வுத் துறை, அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலையுணர்வு நிறுவனம் மற்றும் இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை போன்ற புகழ் பெற்ற நிறுவனங்களுடன் இணைந்து, தரை ஊடுருவல் தொலையுணர்வு மதிப்பாய்வு (Ground Penetrating Radar), காந்த அளவியல் மதிப்பாய்வு (Magnetometer Survey), ஆளில்லா வான்வழி ஊர்தி மதிப்பாய்வு (Unmanned Aerial Vehicle) போன்ற பல்வகையான தொழில்நுட்பங்களைப் பின்பற்றி அவற்றின் மூலம் தொல்லியல் இடத்தை அடையாளம் காண்பது மற்றும் முறையான தொல்லியல் தளங்கள் மற்றும் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்வது என சீரிய நடவடிக்கைகளில் தொல்லியல் துறை ஈடுபட்டுள்ளது.

தொல்லியல் மற்றும் நமது மரபு குறித்தான ஆர்வம் தமிழ்நாட்டில் தற்போது புத்தாக்கம் பெற்றுள்ளது. கடந்த காலத்தைப் பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளுவதற்கு மிக பெரிய வாய்ப்பு தற்போது அமைந்துள்ளது. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் கா. ராஜன், சென்னையிலுள்ள சர்மா மரபுசார் கல்வி மையத்தின் செயலாளர் பேராசிரியர் சாந்திபப்பு, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கடல் வரலாறு மற்றும் கடல் தொல்லியல் துறையின் பேராசிரியர் வீ. செல்வகுமார் ஆகிய வல்லுநர்களின் வழிகாட்டுதலுடன் தற்போதைய தொல்லியல் கள ஆய்வுகளும் அகழாய்வுகளும் மேற்கொள்ளப்படுவதோடு எதிர்காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அனைத்து பணிகளின் வாயிலாக உலகளாவிய வரலாற்றில் தமிழ்ச் சமூகம் சரியான இடத்தைப் பெறுவதற்கும், உலக அரங்கில் தமிழகத்தின் பண்பாட்டினை நிலைநிறுத்துவதற்கும் முறையான தொல்லியல் கள ஆய்வு மற்றும் அகழாய்வுகளின் மூலம் நமது மரபுகளைக் கண்டுபிடித்து, ஆவணப்படுத்தி, விவரித்து மற்றும் உலகத்திற்கு வெளிச்சமிட்டுக் காட்டுவதற்காக தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது.

KM

# ஒத்துழைப்பு நல்கும் முக்கிய நிறுவனங்கள்

தற்பொழுது முறையான தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்று வரும் இடங்களிலிருந்து வெளிக்கொணரப்படும் தொல்பொருட்கள் அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தி புதிய அறிவியல் முறை மூலம் கீழ்க்காணும் புகழ்பெற்ற தொல்லியல் சார்ந்த அறிவியல் சோதனைக் கூடம் மற்றும் நிறுவனங்கள் வழியே அறிவியல் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் விரிவான அகழாய்வுகளுக்குத் துணை நிற்கும் வகையில் தொல் மரபணு பகுப்பாய்வு ஆய்வகம் (ancient DNA Lab) ஒன்றை ரூ. 3 கோடி மதிப்பீட்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஏற்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



# புகழ்பெற்ற தொல்லியல் ஆய்வாளர்களின் பார்வையில்...

## Dr. Rakesh Tewari

*Former Director General*
*Archaeological Survey of India*
*New Delhi*

"

It gives me great pleasure to write on the archaeological activities going on in Tamilnadu. About 25 years ago I got an opportunity to have a look at the potsherds of Northern Black Polished Ware (NBP) recovered from Korkoi and to know about a radiocarbon date available from the associated levels. Based on that it was my opinion that the contacts between South India and North India might be as early as 600-700BCEor even earlier. The outcome of the recent excavations at Keeladi, Kodumanal and other sites in Tamilnadu, including NBP, Black Slipped Ware and a good number of potsherds with Brahmi inscriptions (5th-6th century BCE radiocarbon dates, earliest so far) have corroborated that view. The same has also pushed back the antiquity of urbanisation in that region at par with North India.

Apart from the above it is notable that the evidence for human activities datable to about 1.5 million years before present is known from the site of Atirampakkam (Tamilnadu). Recent archaeological research in Tamilnadu have also provided firm evidence to place well developed iron technology including steel iron during around 1300 BC. Urn burial sites of Sivakashi and Adichannallur are also dated to 15th-16th century BC. Early antiquarian remains comprising bronze, gold, beads et.al indicate well established socio-economic activities. These finds show evolution of human cultures in the region from Stone Age to the Modern Period. In order to get a clearer picture of this process consistent multidisciplinary research is highly required in the entire geo-unit including Tamilnadu, Kerala, South Karnataka, Andhra as well as Shri Lanka.

"

# Dr. Ravindra N. Singh

*Professor,*
*Deputy Coordinator (CAS-UGC) &*
*Principal Investigator (India)*
*BHU-Cambridge ERC & DST-UKIERI Project*
*Hon. Research Associate,*
*McDonald Institute for Archaeological Research, Cambridge*
*Department of AIHC & Archaeology*
*Banaras Hindu University*

.

Fortunately, I have had opportunity to visit most of the sites of Tamil Nadu states under the collaborative project of the University of Cambridge and the Banaras Hindu University under the leadership of Padmsri Prof Dilip Chakrabarti in association with Prof K Rajan and Dr Rakesh Tewari, Ex Director General, Archaeological Survey of India.

Our survey based fieldwork enlighten us in understanding the connection of the Ganga Valley with the Vagai Valley and beyond up to the Kanyakumari, with the courtesy of Prof K Rajan.

In view of early dates of Brahmi in 5th century BC, occurrence of deluxe variety of NBP dateable to 6th century BC, developed town planning at Keeladi, there is great desideratum of national (particularly with north India) and international collaboration in field of scientific archaeological research. There is great scope of scientific researches in the field of human evolution, trade connections with other parts of the country and ancient world, development of metallurgy, particularly tin bronzes, epigraphical studies and many more

## Padma Sri Prof. Dilip K Chakrabarti

*Emeritus Professor of South Asian Archaeology*
*Cambridge University, Cambridge, UK*
*and Distinguished Fellow of Vivekananda International Foundation, New Delhi*

PMC from Keeladi shows, along with other finds of PMC in T'nadu, that the beginning of the historic period in the south, cannot be later than the 6th-5th cent BC. In the north I have dated the early historic beginning as a process that happened between 800-500 BC. It has been good to see NBP/black-slipped from Korkai. There is an early date (earlier than 6th cent BC)of the NBP-associated context of Korkai -- I am forgetting the exact date, but please trace it. 1155 BC seems to be more logical, high tin bronze around 1155 BC is interesting in itself.

---

## Susmita Basu Majumdar

*Professor*
*Department of Ancient Indian History and Culture*
*University of Calcutta*

However the other one which is recently found i.e. in 2021 is an Imperial Silver Punch Marked coins of Gupta Hardekar Series IV, No. 418 XXI G2. Similar coin was also reported in the Amaravati hoard. Reverse has a single checking or control mark. It has five punches on the obverse these are as follows: Sun , Six armed symbol with alternate taurine in a elliptical ovoid, Hare or dog on a five peaked hill, Pellet in a circle with two taurine symbols on either sides.

The coin which was found in 2018 may belong to Series III, GH 291-94 but I am not quite sure about is as it is highly corroded. Following Gupta Hardekar they are both Pre Mauryan.



# நூலடைவுப் பட்டியல்


1. கால்டுவெல், "திருநெல்வெலி சரித்திரம்" தமிழாக்கம் :
ந.சஞ்சீவி மற்றும் கிருஷ்ண சஞ்சீவி, 2004. காவ்யா பதிப்பகம், சென்னை. பக்.17.

2. சேக்கிழார், "திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம்" மும்மையால் உலகாண்ட சருக்கம் :
மூர்த்தி நாயனார் புராணம், 1870 வர்த்தமான தரங்கிணீ அச்சுக்கூடம், சென்னபட்டணம், பக்.127.

3. பரஞ்சோதி மாமுனிவர், "திருவிளையாடற் புராணம்" பாண்டி திருநாட்டுப் படலம் பாடல் :7,
நா.கதிரைவேற் பிள்ளை பரிசோதித்தது. 1928. வித்தியா ரத்னாகர அச்சுக்கூடம், சென்னை.

4. புறநானூறு மூலமும் பழைய உரையும் பாடல் எண்.11 வரி எண்.5
பதிப்பாசிரியர் டாக்டர் உ.வே.சாமிநாதையர் 1971. உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை. பக்.31

5. கம்ப இராமாயணம்: கிட்கிந்தா காண்டம் நாடவிட்ட படலம்-31

6. கலைக்களஞ்சியம் தொகுதி 5, 1958. தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை. பக்.575

7. இராகவன், அ. "கோநகர் கொற்கை" மறுபதிப்பு 2005.
அமிழ்தம் பதிப்பகம், சென்னை. பக். 34-39.

8. இராகவன், அ. "ஆதித்தநல்லூரும் பொருநைவெளி நாகரிகமும்" மறுபதிப்பு 2007.
அமிழ்தம் பதிப்பகம், சென்னை.

9. Smith, Vincent A. **"The Early History of India"** 1962. Oxford, Madras. p. 469

10. **Epigraphia Indica Vol. XI.** 1981. Archaeological Survey of India, New Delhi. p.293

11. **South Indian Inscriptions Vol. VIII ,** 1986. Archaeological Survey of India, Mysore. p.236

12. **Annual Report on Indian Epigraphy 1906 no. 411,** Archaeological Survey of India, New Delhi. p.32





நிழற்படங்கள் கொடுத்துதவியவர்களுக்கு நன்றி

1) **திரு. சி.அ. ராமன், இ.ஆ.ப.,** இயக்குநர்,
அரசு அருங்காட்சியகங்கள் துறை

2) **திரு. எல். ராமச்சந்திரன்,** நிழற்படமெடுப்பவர்

3) **தமிழி** ஆவணப்படக் குழுவினர்

புத்தக வடிவமைப்பு – **கதிர் ஆறுமுகம்**

NN/KM